padippakam



# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

பகுதி II

20

**1940-ம் ஆண்டு நவம்பர் மாதம் D.S. சேனநாயக்கா, S.W.R.D. பண்டார நாயக்கா, G.C.S.கொரியா போன்ற சிங்களத் தலைவர்கள் தலைமையிலான தூதுக் குழுவொன்று டெல்லிக்குச் சென்று 1939-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1-ம் திகதி பயிற்றப்படாத தொழிலாளர்கள் இந்தியாவை விட்டு வெளியேறுவதற்கு இந்திய அரசாங்கம் விதித்த தடையை நீக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்ததுடன் அது தொடர்பாக பேச்சுவார்த்தையும் நடத்தினர்.**

## 'முல்லோயாவில் களப்பலியான தியாகி கோவிந்தன்'

இந்தியாவிலிருந்து புதிதாக தொழிலாளர்களை வரவழைப்பது முடியாமல் போனபோது வெள்ளைக்காரத் துரைமார், உள்ள தொழிலாளர்களை வைத்துக்கொண்டு இன்னும் அதிகமாக வேலைவாங்க முற்பட்டனர்.

முன்பு போல் அவர்களால் தொழிற்சங்கம் அமைத்த குற்றத்துக்காக தொழிலாளர்களை இந்தியாவுக்கு நாடுகடத்தவோ, அல்லது பட்டினி போட்டு சாகடிக்கவோ முடியவில்லை. எப்படியும் பெருந்தோட்டத் தொழிற் துறையில் வேலை செய்வதற்கு பிரித்தானிய நிர்வாகத்துக்கு தொழிலாளர்கள் தேவைப்பட்டனர்.

இவ்வாறு தொழிலாளர்களின் தேவை அதிகரித்த போது ஏற்கனவே அறியாமையிலும் மூட நம்பிக்கைகளிலும் மூழ்கியிருந்த தொழிலாளர்கள் மத்தியில், அடிமைத்தனத்துக்கு எதிராகப் போராட வேண்டும் என்ற ஒரு உத்வேகம் எடுத்தது. அவர்களுக்கு இந்த உத்வேகத்தை ஊட்டுவதில் தொழிற் சங்கங்கள் பெரும்பங்கு வகித்தன.

முன்பு தோட்டத்துரைமார் எத்தகைய மோசமான உத்தரவுகளைப் பிறப்பித்தாலும் மறு பேச்சின்றி தங்களைத் தாங்களே நொந்துகொண்டு அதைச் செய்து பழக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் இப்போது தங்களது உரிமைகளுக்காக வேலை நிறுத்தம் கூட செய்ய ஆரம்பித்தனர்.

1940—ம் ஆண்டு தை மாத முற்பகுதியில் மத்திய மாகாணத்திலுள்ள முல்லோயா தோட்டத் தொழிலாளர்கள் தங்களது அடிப்படை உரிமைகளுக்காக ஒரு வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்துக்கு சமசமாஜக் கட்சியினுடைய அகில இலங்கைத் தோட்டத் தொழிலாளர்கள் சங்கம் தலைமை தாங்கியது.

தோட்ட நிர்வாகம் பல்வேறு விதமான அச்சுறுத்தல் நடவடிக்கைகளை கையாண்டபோதும் தொழிலாளர்கள் ஒன்றுபட்டு நின்று வேலைக்குச் செல்ல மறுத்தனர்.

இறுதியில் தொழிலாளர்களை அடக்குவதற்காக பொலீஸ் படை வரவழைக்கப்பட்டது.

1940—ம் ஆண்டு ஜனவரி மாதம் 19-ம் திகதி முல்லோயா தோட்டத் தொழிலாளர்கள் மீது பொலீஸ் நடாத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் கோவிந்தன் என்ற தொழிலாளி கொல்லப்பட்டார்.

பிரித்தானிய நிர்வாகத்தில் ஏற்கனவே பசி, பட்டினி, நோய், காட்டு விலங்குகளின் தாக்குதல் என்று பல்வேறு காரணங்களால் ஆயிரக்கணக்கில் தோட்டத்தொழிலாளர்கள் உயிரிழந்த போதும், முதல் முதலாக பிரித்தானிய நிர்வாகத்தை எதிர்த்து நடந்த ஒரு தொழிற்சங்கப் போராட்டத்தில் காலனியப் பொலிஸ்காரர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட முதல் தொழிலாளி என்ற வகையில் கோவிந்தனின் பெயர் 'தியாகி கோவிந்தன்' என்று வரலாற்றில் பொறிக்கப்பட்டுள்ளது.



முல்லோயா தோட்டத்தின் எதிரொலி மலையகமெங்கும் எதிரொலிக்க ஆரம்பித்தது. ஊவா மாகாணத்திலுள்ள வீவேசா தோட்டத்தில் தொழிலாளர்கள் நடத்திய வேலை நிறுத்தத்தை முறியடிக்க முல்லோயாப் பாணியில் பொலீஸ்படை வரவழைக்கப்பட்டபோது தொழிலாளர்கள் அஞ்சி அடிபணிந்து ஓடிவிடாது (அக்காலத்தில்) சர்வ வல்லமை பொருந்திய பொலீஸ் படையை எதிர்த்துத் தாக்கி விரட்டியடித்த சம்பவம், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும்.

**பிரபல சமசமாஜத் தலைவரான கொல்வின் ஆர்.டி.சில்வா இந்தியாவில் தலைமறைவாக இருந்த காலத்தில் தியாகி கோவிந்தனின் நினைவாக தனது பெயரை 'கோவிந்தன்' என்று வைத்துக்கொண்டார்.**

இந்தக் காலகட்டத்தில் இரண்டாவது உலக யுத்தம் ஆரம்பித்து விட்டதால் இறப்பரின் தேவை அதிகரித்து விட்டது. இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட றப்பரும், அதனால் செய்யப்படும் உப உற்பத்தி பொருட்களும், இலாபகரமான விலைக்கு விற்கப்பட்டன. இலங்கையின் பொருளாதாரத்தில் அதுவரை இருந்து வந்த தேக்கம் அகன்றுவிட்டது.

எனவே தோட்டத் தொழிலாளர்களுடன் சமரசம் செய்து கொண்டு, அவர்களை வைத்து வேலை வாங்கி அவர்களது உழைப்பை உறிஞ்ச வேண்டுமென்று காலனிய ஆட்சியாளர்கள் மட்டுமல்லாமல் சிங்கள இனவாதிகளும் கூட எண்ணினர்.

1940-ம் ஆண்டு நவம்பர் மாதம் D.S. சேனநாயக்கா, S.W.R.D. பண்டார நாயக்கா, G.C.S.கொரியா போன்ற சிங்களத் தலைவர்கள் தலைமையிலான தூதுக் குழுவொன்று டெல்லிக்குச் சென்று 1939-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1-ம் திகதி பயிற்றப்படாத தொழிலாளர்கள் இந்தியாவை விட்டு வெளியேறுவதற்கு இந்திய அரசாங்கம் விதித்த தடையை நீக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்ததுடன் அது தொடர்பாக பேச்சுவார்த்தையும் நடத்தினர்.

ஜவகர்லால் நேரு இலங்கைக்கு வந்து அங்கே பௌத்த சிங்கள இனவாதிகளால் திட்டமிட்டு உருவாக்கிவிடப்பட்டிருந்த இந்திய எதிர்ப்புணர்வை நேரடியாகப் பார்த்தும், கேட்டும் தெரிந்து கொண்டிருந்தபடியினால் இலங்கை அரச தூதுக்குழுவின் கோரிக்கையை ஏற்று இந்திய அரசாங்கம் தொழிலாளர் வெளியேற்ற தடைச் சட்டத்தை நீக்க மறுத்துவிட்டது.

இந்த இடத்திலே இன்னொரு முக்கியமான சம்பவத்தையும் குறிப்பிட வேண்டும். இன்றைக்கு மலையக மக்களின் வாக்குரிமை மற்றும் அரசியல் உரிமைகளைப் பறித்து அவர்களில் கணிசமான பகுதியினரை நாடற்றவர்களாக்கியதுடன் அவர்கள் சிங்கள விவசாயிகளின் நிலங்களைப் பறிக்க வந்த ஆக்கிரமிப்பாளர்கள் என்று கதை கட்டிவிடும் சிங்கள அரசியல்வாதிகள் 1937-ம் ஆண்டு இந்தியத் தொழிலாளர்கள் இறக்குமதி செய்யப்படுவதற்கு அனுமதி வழங்குவதை நிறுத்த வேண்டும் என்று கோரி, கலாநிதி என். எம் பெரேரா சட்டசபையில் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்தபோது 5 பேர் மட்டும்தான் அதற்கு ஆதரவாக வாக்களித்தனர். 29 பேர் அதை எதிர்த்து அதாவது தொடர்ந்து இந்தியத் தொழிலாளர்களை இலங்கைக்கு இறக்குமதி செய்து கொண்டே இருக்க வேண்டும் என்று வாக்களித்ததால் அப்பிரேரணை தோல்வியடைந்தது.

★ ★ ★

யுத்த நிலைமையையும் அதனால் ஏற்பட்ட சந்தை வாய்ப்பையும் கருத்திற் கொண்டு இரண்டு முக்கிய விடயங்களை காலனிய அரசு மேற்கொண்டது. அதாவது தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தங்கள் போராட்டங்களில் ஈடுபடுவதை தவிர்த்துக்கொள்ளும் முகமாக, 1940-ம் ஆண்டு ஜூலை மாதம் 29-ம் திகதி தோட்டத் துரைமாரையும் தொழிற் சங்க பிரதிநிதிகளையும் அழைத்துப் பேசவைத்து 7 அம்ச ஒப்பந்தமொன்று செய்வித்தது.

அதே நேரத்தில் சமசமாஜக் கட்சித் தலைவர்களைப் பிடித்து சிறையில் அடைத்துவிட்டால் தோட்டத்தொழிலாளர்களை வழிக்குக் கொண்டுவந்துவிடலாம் என்று காலனிய அரசு எண்ணியது.

அப்போது சட்டசபையில் இருந்த சிங்கள தமிழ் தலைவர்கள் யுத்த காலகட்டத்தில் பிரித்தானிய அரசுக்கு நெருக்கடி ஏதும் கொடுக்காமல் அவர்களுக்கு பூரண ஆதரவு கொடுத்து அவர்களின் கரங்களை பலப்படுத்த வேண்டும் என்ற கொள்கை உடையவர்களாக இருந்தனர்.

ஆனால் சமசமாஜக் கட்சியினர், அது ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டத்தை துரிதப் படுத்த வேண்டிய காலகட்ட; காலனிய அரசுக்கு ஆதரவளிப்பது மக்களுக்கு செய்கின்ற துரோகம் என்று கூறியதை அடிப்படையாக வைத்துக்கொண்டு பிரித்தானிய அரசு அக் கட்சியின் தலைவர்களான என்.எம். பெரேரா, கொல்வின் ஆர்.டி. சில்வா, பிலிப் குணவர்த்தனா, எட்மன் சமரக்கொடி ஆகியோரைப் பிடித்து சிறையில் அடைத்தது.

ஆனால் கட்சிக்கோ கட்சியின், தொழிற் சங்க அமைப்புக்கோ தடைவிதிக்கப்படவில்லை. ஆனால் அக் கட்சியின் ஏனைய முக்கிய உறுப்பினர்கள் தீவிர கண்காணிப்புக் உட்படுத்தப்பட்டனர். கட்சியினுடைய அச்சகம் சீல்வைக்கப்பட்டது.

1942-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7-ம் திகதி இரவு என்.எம். பெரேரா, கொல்வின் ஆர்.டி. சில்வா, பிலிப் குணவர்த்தனா, எட்மன் சமரக்கொடி ஆகிய நால்வரும் சிறைக்காவலரான சொலமன் என்பவரின் உதவியோடு சிறையில் இருந்து வெளியேறி வல்வெட்டித்துறைக்குப் போய் அங்கிருந்து தோணி ஏறி தமிழகம் சென்றனர்.

பிரபல சமசமாஜத் தலைவரான கொல்வின் ஆர்.டி.சில்வா இந்தியாவில் தலைமறைவாக இருந்த காலத்தில் தியாகி கோவிந்தனின் நினைவாக தனது பெயரை 'கோவிந்தன்' என்று வைத்துக்கொண்டார்.

ஆனால் அதே கொல்வின் ஆர்.டி சில்வா 1970 — 77 காலப் பகுதியில் சிறீமாவோ பண்டாரநாயக்காவின் அமைச்சரவையில் பெருந்தோட்டத் தொழிற் துறை அமைச்சராகப் பதவியில் இருந்தபோது தோட்டத்தொழிலாளர்களின் உரிமைகளை பறிக்கும் ஒருவராகவும் ஆண், பெண் தொழிலாளர்களுக்கு சம சம்பளம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை எதிர்த்த ஒருவராகவும் அதாவது படு சந்தர்ப்பவாதியாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**1970 – 77 காலப் பகுதியில் சிறீமாவோ பண்டாரநாயக்காவின் அமைச்சரவையில் பெருந்தோட்டத் தொழிற்துறை அமைச்சராகப் பதவியில் இருந்தபோது தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளை பறிக்கும் ஒருவராகவும் ஆண், பெண் தொழிலாளர்களுக்கு சம சம்பளம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை எதிர்த்த ஒருவராகவும் அதாவது படு சந்தர்ப்பவாதியாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.**

**- நக்கீரன்**

படிப்பகம்